www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi12T

19-09-2024.

தென்காசி மாவட்டம்
காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 12

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**

1) ''காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை'' - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

2) படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

3) 'விளியறிஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

4) தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்

அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்
இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

5) பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

6) ''மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!''
- இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடிஎதுகை, சீர்மோனை ஆ) அடிமோனை, அடிஎதுகை
இ) சீர்எதுகை, அடிமோனை ஈ) சீர்மோனை, சீர்எதுகை

7) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தின் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

8) **பொருத்துக:**

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1. மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2. கல்கோட்டரி
இ) பல்லாவரம் - 3. அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4. கூவம்

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

9) மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு ..............

அ) கலைத் திருவிழா ஆ) கோவில் திருவிழா
இ) முப்பெரும் விழா ஈ) தேர்தல் திருவிழா

10) ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு

அ) 1812 ஆ) 1984 இ) 1818 ஈ) 1912

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11) கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி  ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி  ஈ) பனையளவு செய்த உதவி

12) "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"
- இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ...........

அ) நன்னூல்  ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம்  ஈ) இலக்கண விளக்கம்

13) உலகப் புவி நாள்

அ) ஏப்ரல் 24  ஆ) ஏப்ரல் 26  இ) ஏப்ரல் 22  ஈ) ஏப்ரல் 18

14) **பொருத்துக:**

அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2. மேய்ச்சலை மறந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4. மரங்களிலிருந்து வீழ்ந்தன

அ) 3, 2, 4, 1  ஆ) 2, 3, 1, 4  இ) 1, 4, 3, 2  ஈ) 4, 2, 3, 1

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16) நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
17) செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
18) 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21) மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
விலை, விளை, விழை

24) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்றுக் கொடுக்கும்.

25) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காய் மாற்றுக:**
இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.

26) **கலைச்சொல்லாக்கம் தருக:**
அ) Biography  ஆ) Metro Train

27) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**
அ) சாய்ப்பான்  ஆ) பொலிந்தான்

28) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) வானமெல்லாம்  ஆ) பெருங்கடல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



29) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:**
நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

30) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்:**
பலகை **(அல்லது)** கோவில்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

31) பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

32) குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

33) ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

34) சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

35) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்குக.

36) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**(அல்லது)**

ஆ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக:**
**(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- **கவிமணி தேசிக விநாயகம்**

41) அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

42) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

அ) யானைக்கும் அடி சறுக்கும்

**(அல்லது)**

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43) **தமிழாக்கம் தருக:**

1. Learning is a treasure that will follow its owner every where.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. Knowledge of languages is the door way to wisdom.

**செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அறியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சி ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள்:**

1. எது அறியதொரு கலை?
2. மொழி எத்தகைய அரிய கருவியாய் உள்ளது?
3. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
4. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?

சிவக்குமார்.மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப,
வல்லம் - 627809
தென்காசி மாவட்டம்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

44) அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

**(அல்லது)**

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

45) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

**(அல்லது)**

ஆ) பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46) அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக:** **4+2=6**

47) அ) "ஒருமையுடன் .........." எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'சினம்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com